தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, வைகாசி 21, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஜூன் 3, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் **திரு. செ. செம்மலை** *அவர்கள் தலைமையில் முற்பகல் 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:

“கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி.”

கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசுதல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர் மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவர் ஆவார்.

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

1. பேரவைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்: *பேரவையின் இன்றைய அலுவல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 178–வது பிரிவின்கீழ், பேரவைத் தலைவர் தேர்தல் ஆகும். இப்பதவிக்கான வேட்புத் தாள், சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது.*

சட்டமன்றப் பேரவை விதி 7, உள்விதி 4–ன்படி, பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கவேண்டும். அவர்களின் விவரம்:

[தற்காலிகப் பேரவைத் தலைவர்] [2016 ஜூன் 3

நியமனம் செய்யப்பெற்றவர்	:	திரு. ப. தனபால் அவர்கள்
முன்மொழிந்தவர்	:	மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)
வழிமொழிந்தவர்	:	மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்

பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. ப. தனபால் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவரது வேட்புத் தாள் மட்டுமே பெறப்பட்டுள்ளதால், திரு. ப. தனபால் அவர்கள், இப்பேரவையின் தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி) ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். இத்துடன் என் பணியை நிறைவு செய்கின்றேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில், இந்த அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களை மரபுப்படி அவரது இருக்கையில் அமரச் செய்தல் வேண்டும். எனவே, பேரவைத் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் அழைத்துவந்து பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்கள், இருக்கையில் அமருவதற்குச் செல்லும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, பேரவைத் தலைவர் அவர்கள், அவரின் இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் அழைத்துவந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஜூன் 3]

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தனித்தே நின்றார்! தம் சாதனைகளை முன்வைத்தே தன்னந்தனியாக உழைத்தார்! தர்மத்தைக் காத்தார்! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தின் உள்ளம் எல்லாம் நிலைத்தார்! தனக்கு நிகர் ஒருவரும் இல்லை என்பதை நடந்து முடிந்த சட்டமன்றத் (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல்மூலம் தரணிக்கு மீண்டும் உரைத்தார்! மகத்தில் பிறந்த மகராசிக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்வோடுகூடிய மக்கள் சக்தி வைகாசி திங்களில் தந்த வெற்றி! வரலாற்று வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை புரிந்து சரித்திரம் படைத்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வருக! வருக! என பணிந்து வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

15–வது சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, வருகை புரிந்துள்ள உங்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

2. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவை விதி 8, உள்விதி 2–ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:*

நியமனம் செய்யப் பெற்றவர்	:	*திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்*
முன்மொழிந்தவர்	:	*மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)*
வழிமொழிந்தவர்	:	*மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்*